SOND

SOND Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.


T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

சித்திரை, 2013

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே

1. அம்பாறை
2. மட்டக்களப்பு
3. யாழ் ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## Creative a conducive society for good environment for the future

**பங்காளர் அமைப்பிற்கிடையில் Good practices ஐப் பகிர்ந்துகொள்ளுதல்.**

அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் Diakonia நிதி உதவியுடன் செயற்பட்டுவரும் பங்காளர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் Good practices ஐத் தமக்குள்ளும் மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற அமைப்புக்களுடனும் பகிர்ந்துகொள்ளும் நிகழ்வு 17,18,19/04/2013 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் SOND அலுவலகத்தில் அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையின் கீழ் நடைபெற்றது. இக் கற்றல் செயற்பாட்டில் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களின் Diakonia பங்காளர் நிறுவனங்களான SOND,SWOAD,Ampara district NGO consortium, AWA, Caritas EHED, viluthu ,CDF,Suriya ஆகிய அமைப்புக்களும் மற்றும் யாழ் மாவட்டத்தில் இருந்து Jaffna district NGO Consortium, Vadaliyadaippu WRDS, Selvanayakerpuram society, JSAC,Santhiyam,Grand Bazer RDS, Ponnalai WRDS ஆகிய நிறுவனங்களும் பங்குபற்றி Good practices ஐப் பகிர்ந்துகொண்டதுடன் முன்மாதிரியாகச் செய்யப்பட்ட வாழைத் தோட்டம், யாழ் சக்தி பாரம்பரிய உணவு உற்பத்தி நிலயம், மூலிகைத் தோட்டம் ஆகியவற்றினையும் சென்று பார்வையிட்டனர்.

மேற்படித் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று சென் ஜோன்ஸ் பாடசாலையில் 26/04/2013 அன்று பாடசாலை மாணவர்களுக்கு நிழல் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு அவை நடுகை செய்யப்பட்டதுடன் அவற்றினைப் பராமரிப்பதற்கான மாணவர் குழுவும் அமைக்கப்பட்டது.

*சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான பிரசாரங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல்.*

மேற்படித் திட்டத்தின் கீழ் அக்கரைப்பற்று சென் ஜோன்ஸ் பாடசாலையில் 26/04/2013 அன்று பாடசாலை மாணவர்களுக்கு நிழல் மரக்கன்றுகள் வழங்கப்பட்டு அவை நடுகை செய்யப்பட்டதுடன் அவற்றினைப் பராமரிப்பதற்கான மாணவர் குழுவும் அமைக்கப்பட்டது.







## மொழிகள் உரிமைகள் திட்டம்

மொழிகள் உரிமைகள் திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள இளைஞர் குழுக்கள், கிராமமட்ட அமைப்புக்களுக்கான பயிற்சிகள் யாழ், அம்பாறை மாவட்டத்தில் நடை பெற்றுள்ளது.

**யாழ்மாவட்டத்தில் நடை பெற்ற பயிற்சிகளின் விபரம் கீழ்வருமாறு**

எமது அமைப்பின் கீழ் செயற்படும் இளையோர் குழுக்களுடைய உறுப்பினர்களுக்கு 2013.02.02ல் உறவுகளைப் பலப்படுத்தல் பயிற்சி வளதாரி ச.செந்துராசா அவர்களாலும் 2013.02.05 ம்திகதி அடிப்படை உரிமைகள் தொடர்பான பயிற்சி சட்டத்தரணி Y. யோகானந்தி அவர்களாலும் யாழ் சொண்ட் அலுவலகத்தில் நடாத்தப்பட்டது இதில் 47 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

2013.04.08 ம் திகதி அமைப்பின் கீழ் செயற்படும் கிராமமட்ட அமைப்புகளிற்க்கான அடிப்படை உரிமை மீறல் பயிற்சி சட்டத்தரணி Y. யோகானந்தி அவர்களாலும் 2013.04.09 ல் உறவுகளைப்பலப்படுத்தல் பயிற்சி வளவாளர் ச.செந்துராசா அவர்களாலும் நடாத்தப்பட்டது இதில் 42 பேர் கலந்து கொண்டு அடிப்படை உரிமைகள் பற்றித் தெரிந்து கொண்டுள்ளார்கள்.






அம்பாறை மாவட்டத்தில் நடை பெற்ற பயிற்சிகளுடைய விபரம் கீழ்வருமாறு.

**இளையோரிற்க்கான பயிற்சி**

2013.04.17 ம் திகதி இளையோரிற்கான உறவுகளைப்பலப்படுத்தல் பயிற்சி வளவாளர் ச.செந்துராசா அவர்களாலும், 2013.04.25 அன்று அடிப்படை உரிமைகள் தொடர்பான பயிற்சி சட்டத்தரணி றசீட் முகமட் அவர்களாலும் நடாத்தப்பட்டது. 57 பேர் பயிற்சியில் கலந்து கொண்டு பலனடைந்தார்கள்

**கிராமமட்ட அமைப்புக்களிற்க்கான பயிற்சி**

2013.04.23 ம் திகதி இளையோரிற்கான உறவுகளைப்பலப்படுத்தல் பயிற்சி வளவாளர் ச.செந்துராசா அவர்களாலும், 2013.04.27 அன்று அடிப்படை உரிமைகள் தொடர்பான பயிற்சி சட்டத்தரணி றசீட் முகமட் அவர்களாலும் நடாத்தப்பட்டது. 5 கிராமமட்ட அமைப்புகளிலிருந்து 37 பேர் பயிற்சியில் கலந்து கொண்டு பலனடைந்தார்கள்.









SOND

# ஆங்கில வகுப்பு

2013.04.08 ம் திகதி PCA அமைப்பினால் VSO நிறுவனத்தின் அனுசரணையுடன் மியான் மார் நாட்டிலிருந்து தொண்டு அடிப்படையில் 3 மாத காலத்திற்கு எமது நிறுவனத்திலிருந்து பணியாற்றுவதற்கு சுகித்வோ என்னும் யுவதி வருகை தந்துள்ளார். இவர் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்றினைச் சேர்ந்த 12 மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பினை நடாத்தி வருகின்றார்.



## பாலர் பாடசாலை ஆசிரியருக்கான மாதாந்த கலந்துரையாடல்.

இம் மாதம் அம்பாரை மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடலானது 2013.04.11ம் திகதி அன்று காலை 09.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 13 முன்பள்ளியைச் சேர்ந்த 23 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது.

கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கீழ்வருமாறு

- ✓ இவ்வருடத்திற்குரிய புதிய மாணவர்களின் பெயர் விபரம் அடங்கிய முழுவிபரத்தினை அனுப்பி வைக்கப்படாத ஆசிரியர்கள் எதிர் வரும் மாதம் 5ம் திகதிக்கு முன்னர் எமது அமைப்பிற்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.
- ✓ அடுத்த கலந்துரையாடலின் போது காந்தி பாலர் பாடசாலை ஆசிரியர்களினால் ஆக்கச் செயற்பாடுகள் ஏனைய ஆசிரியர்களுக்கு செயல்முறை பயிற்சியின் ஊடாக செய்து காண்பிக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டது.





## நிதியின்றிய செயற்திட்டங்கள்

**அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.**

### சிறுவர் செயற்றிட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 35 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### 01. இம் மாதம் நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் **SOND** பயிற்சி மண்டபத்தில் 02 கலந்துரையாடலும், 03 திரைப்படக்காட்சி காண்பித்தலும் நடாத்தப்பட்டது

நடைபெற்ற கலந்துரையாடலின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள்.

1. 2013.04.24ம் திகதி அன்று சித்திரா பௌர்ணமி மகோற்சவ திருவிழாவினை முன்னிட்டு அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் காந்தி கழக சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடாத்துவது தொடர்பாக கூறப்பட்டது. அதற்கமைவாக 12 சிறுவர்களை 15 கலை நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

2. 2013.04.07ம் திகதி அன்று அனைத்து சிறுவர்களுக்கு 05 புத்தகங்கள் வீதம் வழங்கப்படும் இதனை உங்கள் வீட்டுக்கு அருகில் உள்ள நபர்களுக்கு கொடுத்து அவர்களின் வாசிப்புத் திறனை அதிகரிக்குமாறு குறிப்பிடப்பட்டது

3. புதிதாக வருகை தந்த சிறுவர்களுக்கு கணனி வகுப்புக்குரிய நேரசூசி வழங்கப்பட்டது.

4. எதிர்வரும் மாதம் எமது அமைப்பின் பணியாளரான விஜயகுமார் அவர்களின் தலைமையில் சிறுவர்களின் மேம்பாட்டுக்கான ஒரு சில பயிற்சிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வாராந்தக் கலந்துரையாடலின் போது நடைபெறும் என கூறப்பட்டது.

### 02. சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. 2013.04.07ம் திகதி அன்று நடமாடும் நூலக சேவைக்காக அனைத்துச் சிறுவர்களும் 05 புத்தகங்கள் வீதம 48 புத்தகங்கள் எடுத்துச் சென்றனர்.

### 03. SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக விளையாட்டுப்பொருட்கள் வழங்கப்பட்டது.



SOND

## கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 12 சிறுவர்கள் 09 தடவைகளும் 04 இளையோர் 05 தடவைகளும் கணனியைப் பயன்படுத்தியுள்ளனர்.



## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 7 தலைப்பில் 150 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.





SOND

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(**Create a conducive Society for Good Environment for the Future**) செயற்திட்டம்..

காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும்
**(Climate Change & Environmental protection )**

மட்டக்களப்பு ஊறணிச் சந்தி முதல் பிள்ளையாரடி வரையிலும் 51மரங்களை நடப்பட்டுள்ளது. இவை களவிஜயம் செய்து பார்வையிடப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

அந்த வகையில் மட/புதுமுகத்துவாரம் புனித நேசியாஸ் வித்தியாலயம் , கல்லடி வேலூர் சக்கி வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலையினை தேர்ந்தெடுத்து அதிபர்,ஆசிரியருடன் கலந்துரையாடி மற்றும் மாணவர்களுடனும் இத்திட்டம் தொடர்பாக கலந்துரையாடி குழுக்களையும் அமைத்துக் கொண்டோம்.
அடுத்த கட்டமாக இவர்களுக்கு பயிர், பழமரங்கள், போன்றன கொள்வனவு செய்து வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் விவசாய குழுக்களின் முகாமைத்துவ கொள்ளளவினை கட்டியெழுப்புதல். **Management Capacity building for farmers & women groups**

செல்வாநகர் தாய்மார் சமூக அபிவிருத்தி சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக

ஆரையம்பதி -கிழக்கு செல்வாநகர் தாய்மார் சங்கத்தின் பொதுக் கலந்துரையாடல் 30.04.2013ம் திகதி மாலை 4.00 நடைபெற்றுள்ளது. இதில் 18 அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர்.

இம்மாதம் நடாத்தப்பட்ட பயிற்சிகள் தொடர்பானது.

இம்மாதம் ஆரையம்பதி சக்தி தாய்மார் சங்கத்திற்கும், ஏறாவூர்-6 மகளிர் அமைப்பு தங்களுடைய தற்போதைய செயற்பாடு தொடர்பாகவும் தங்கள் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் பயற்சி SOND அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. இதில் ஆரையம்பதி சக்தி தாய்மார் சங்கத்தில் இருந்து தலைவி, பொருளாளர், உட்பட 2 அங்கத்தவர்களும், அதே போன்று ஏறாவூர் அமைப்பில் இருந்து தலைவியுடன் 2 அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

இயற்கை வளங்களை பாதுகாத்து வீட்டுக் கழிவுகளை சேதனைப்பசளையாக்கி விட்டுத் தோட்டம் செய்தல் தொடர்பான செயற்பாடு

இத்திட்டத்தில் சீலாமுனை , பெரிய உப்போடை, சின்ன உப்போடை ஆகிய கிராமத்தின் உள்ள மக்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் அக்கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட குழுக்களுக்கு 20.04.2013 திகதி SOND அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் அவர்களினால் தங்கள் செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி இடம்பெற்றது. இப்பயிற்சிக்கு 9 பேர் கலந்துகொண்டனர்.

SOND

**USAID RISEN திட்டத்தின் மூலம் அடைந்த மாற்றங்கள் மற்றும் வெளியீடுகளை ஆவணமாக்கல்_செயற்திட்டம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் USAID நிறுவனம் பங்காளருடன் இணைந்து கடந்த 3 வருடங்களாக மேற்கொண்ட திட்டங்களின் விளைவுகளை ஆவணமாக்கும் செயற்பாடு இடம்பெற்றது.

இத்திட்டத்தின் கீழ் இம்மாதம் 18 தொடக்கம் 22 ம் திகதி வரை பயனாளிகளையும், திட்டங்களையும் வீடியோ படமாக்கும் வேலைகள் நிறைவடைந்தது.





**வளநிலைய பயன்பாடு**

சொண்ட அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இந்த நிலையில் வள நிலையம் மூலமாக சித்திரை மாதம் தகவல் வளநிலையத்தின் மூலம் 6 தலைப்பில் 58 புத்தகங்கள் இளையோர் சிறுவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## கணனி வகுப்பு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 10 இளையோர் 07 இளையோர் உட்பட 17 பேர் பயனடைந்துள்ளனர்.

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

### April Month Events சர்வதேச மிதிவெடி செயற்பாட்டு தினம் 2013

கடந்த 26.04.2013 அன்று யாழ்ப்பாணம் YMCA மண்டபத்தில் சர்வதேச மிதிவெடி செயற்பாட்டு தினம் மிதிவெடி செயற்பாட்டுக் குழுக்களினால் கொண்டாடப்பட்டது. பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யுனிசெவ் சொண்ட், சர்வோதயம், இராணுவத்தின் 10வது படைப்பிரிவின் மனித நேய தொழிநுட்ப பிரிவினர், மனித நேய மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினரின் அனுசரனையுடன் நடைபெற்றது.

இதில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரனையுடன் சொண்ட் நிறுவனத்தினால் மிதிவெடி வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டோருக்கு வாழ்வாதார உதவியும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் அனுசரனையுடன் முச்சக்கர வண்டியும் துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டது. அத்துடன் கலாச்சார நிகழ்வுகளும் கண்காட்சிகளும் நடைபெற்றது.










## NSA திட்டத்தின் விருது வழங்கும் வைபவம்

NSA திட்டத்தின் இறுதி நிகழ்வு 2013.04.10 அன்று நடைபெற்றது இதில் திட்ட செயற்பாட்டு காலத்தில் சிறப்பாக செயற்பட்ட சிவில் சமூக அமைப்புகளுக்கான விருது,சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

முதலாவது விருதினை J/80 பெரியகடை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி திருமதி.வ.சசிரேகா அவர்களுக்கு சங்கானை ADP அவர்கள் வழங்குவதையும் இரண்டாவது சங்கத்தின் விருதினை J/145 வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்க தலைவர் திரு.கந்தசாமி அவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் அவர்களும் வழங்கி வைத்தார். மூன்றாவது சங்கத்தின் விருதினை நல்லூர் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்கள் J/109 சங்கிலியன்தோப்பு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவி திருமதி. ம.புஸ்பமதி அவர்களுக்கு வழங்குவதையும். J/80 பெரியகடை மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்துக்கான சான்றிதழை SOND நிறுவன தலைவர் அவர்கள் வழங்கு இந்நிகழ்வில் பங்குபற்றிய கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் கலாச்சார நிகழ்வுகளும் இடம் பெற்றது.










### வளநிலைய பயன்பாடுகள்

இம் மாதம் யாழ் SOND அலுவலகத்தினுடைய நூலகத்திலிருந்து இளையோர், சிறுவர்களால் கீழ்வரும் புத்தகம், இறு வெட்டுக்கள் வெளிச் செல்லப்பட்டுள்ளது. 37 புத்தகங்கள், 16 இறு வெட்டுக்கள் வெளிச் செல்லப்பட்டுள்ளது.

SOND

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.(Create a conducive Society for Good Environment for the Future).**



## தொலைநோக்கு

**“புதிய சமூகம் உருவாக்குவோம்”**

## பணிநோக்கு

**.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.**